முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

**மகான் பிரும்மமுனிவர் அருளிய நித்ய பிரசன்ன ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

16.05.2019, வியாழக்கிழமை

1. **அவதார ஞான ஒளி தேசிகனே**
**ஆறுமுகன் சக்தியான அரங்கனே**
**புவனமதில் உன் பெருமை கூறி**
**புகலுவேன் நித்ய பிரசன்ன ஆசியை**
2. ஆசியை **விகாரி விடை திங்கள்**
**அறிவிப்பேன் உபயதிகதி குருவாரம்**
**(விகாரி வருடம் வைகாசி மாதம் 2ம் நாள் 16.05.2019, வியாழக்கிழமை)**
**அருளுவேன் உலகோர் நலம்பெற**
**ஆசிதனை பிரும்மமுனிவர் யானும்**
3. நலம் தரும் அரங்க மகானின்
ஞான வழிகாட்டலை ஏற்று வர
பலம் கூடி உலகோர் சிறப்பர்
பயமின்றி சகல பாதுகாப்பும் பெறுவர்
4. காப்பு தரும் சன்மார்க்க வழியை
கடைப்பிடித்து வரும் மக்கள்
காப்புதனை எல்லா வகையும் அடைவர்
கட்டாயம் மேன்மை நிலை பெறுவர்
5. நிலைத்தன்மை தரும் ஞானி
நிலவுலகின் அவதார யோகி
சளைக்கா தருமம் பெருக்கி
சகலருக்கும் ஞானம் அருளுகின்ற
6. அருளுகின்ற அரங்க ஞானியை
அகிலத்தார் குருவாக ஏற்று வர
அருள்பலமுடன் பொருள் வளமும்
அனைத்து வகையும் ஏற்றம் காண்பர்
7. காண்கவே கிரக இடர் வழி
கருமவினை வழி துன்புறும் மக்கள்
உண்மை ஞான உயர் குரு
ஓங்கார ஆசான் வழிக்கு வர
8. வருகவே துன்பமில்லா வாழ்வும்
வாழ்வாதாரம் சோடை இல்லா
முருகப்பெருமான் அருளும்
முழுமை தயவும் பெற்று சிறப்பர்
9. சிறப்பான வாழ்வும் பலமும்
சிந்தை தெளிவும் ஞானமும்
மறுப்பில்லா சகல வரமும்
மகான் அரங்கன் திருவடி பற்ற கிட்டும்

10. கிட்டுமே தொடர் தருமமிட
குடிலை நாடி தொடர்பை கூட்ட
தட்டாது உயர் தொண்டு செய்து
தருமத்தில் உதவி வருதலுற

11. வருகவே எல்லா வகையும்
வல்லமையான வாழ்வும்
முருகப்பெருமான் பெருந்தயவால்
முழுமையும் பிறவா பேறும் கிட்டும் நித்ய பிரசன்ன ஆசி முற்றே.

–சுபம்–

முருகப்பெருமான் துணை

**மகான் பிரும்மமுனிவர் அருளிய நித்ய பிரசன்ன ஆசி நூலின் சாரம் :**

முருகப்பெருமானின் அவதாரமாக ஜோதி சொரூபியாக வந்துதித்த ஞான ஒளி தேசிகனே ஆறுமுக அரங்கமகா தேசிகனே முருகப்பெருமானின் சக்தி வடிவமான அரங்கமகா தேசிகனே இவ்வுலகினில் அற்புதமான உமது பெருமைகளை கூறியே உலக நலன் கருதி விகாரி வருடம் வைகாசி மாதம் 2ம் நாள் 16.05.2019, வியாழக்கிழமையான இன்றைய தினமதனிலே நித்ய பிரசன்ன ஆசி நூல்தனையே பிரும்மமுனிவர் யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் பிரும்மமுனிவர்.

சர்வ வளமும் நலமும் தந்தருளும் ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் ஞான வழிகாட்டல்களை உலக மக்களெல்லாம் ஏற்று வர, உலக மக்களெல்லாம் ஞானபலம் பெருகி சிறப்படைவார்கள். பயம் ஏதும் இன்றி சகல பாதுகாப்பையும் தந்தருளும் சன்மார்க்க நெறியை உலக மக்கள் கடைப்பிடித்து வரவர, கடைப்பிடிக்கின்ற மக்களெல்லாம் உறுதியாக உயர்ந்த நிலையை அடைவார்கள்.

நிலையான மரணமிலாப் பெருவாழ்வை தந்தருளும் மகா ஞானி இவ்வுலகின் அவதார யோக ஞானி சற்றும் தளர்வின்றி சலிக்காமல் தொடர்ந்து தருமங்களை அளவிலாது செய்து வருகின்ற வள்ளல் ஞானி சகலருக்கும் ஞானம் அருளிக் காக்கின்ற ஆறுமுக அரங்கமகா தேசிகனை உலக மக்களெல்லாம் உறுதியுடன் குருவாய் ஏற்று பின் தொடர்ந்து வர அவரெல்லாம் அருள்பலமும் பொருள் வளமும் பெறுவதுடன் அனைத்து வகையிலும் பலவிதமான முன்னேற்றங்களை காண்பார்கள்.

கிரகதோஷங்களாலும் கருமவினைகளினாலும் துன்பப்படுகின்ற மக்களெல்லாம் உண்மை ஞான உயர் குரு ஓங்கார ஆசான் ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் உண்மை ஞான கொள்கைகளை ஏற்றுக் கொண்டு அரங்கனை பின்தொடர்ந்து ஞானவழிக்கு வர, அவர்களுக்கு எல்லாம் துன்பமில்லா வாழ்வும் வாழ்வாதாரம் பெருகி குற்றம் இல்லாத வாழ்வும் முருகப்பெருமானின் அருளும் முழுமையான தயவும் பெற்று சிறப்படைவார்கள்.

சிறப்புமிக்க வாழ்வையும் பலம்மிக்க வாழ்வையும் சிந்தை தெளிவும் ஞானமும் மறுப்பின்றி எல்லா வரங்களையும் பெற, ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் திருவடிகளை பயபக்தியுடன் பற்றிட சிறப்புடன் பெற்று உயர்வடைவார்கள். அரங்கனின் தொடர் தருமப் பணிகளில் கலந்து கொண்டு தருமங்களுக்கு பொருளுதவிகள் செய்வதுடன் தொடர் தருமமிட உலகின் ஏழாம் படை வீடாம் துறையூர் ஓங்காரக்குடிலினை நாடி அரங்கரின் தொடர்பை பெருக்கி வர, தவறாமல் தொடர்ந்து தொண்டுகளைச் செய்து தருமங்களில் பங்குபெற எல்லா வகையிலும் பெருமைமிக்க வல்லமையான வாழ்வையும் முருகப்பெருமான் பெருந்தயவினால் முழுமை ஞானமும் பிறவாப் பெருநிலையயையும் அடைந்து சிறப்படைவார்கள் எனக் கூறுகிறார் மகான் பிரம்மமுனிவர்.

–சுபம்–